# DEPOSITION OF WITNESS
# UNDER CODE OF CRIMINAL PROCEDURE

## IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, DHARMAPURI.

| | | |
|---|---|---|
| **Case No.** | **:** | **CC. No: 388/2022** |
| **Ranking of witness** | **:** | **PW2** |
| **Name** | **:** | **C. மூர்த்தி** |
| **Father's Name** | **:** | **த/பெ. சின்னையன்** |
| **Age** | **:** | **48** |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Religion** | **:** | |
| **Calling** | **:** | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 15-10-2025.**

**எதிரி நீதிமன்றத்தில் நேரில் முன்னிலையானார்.**

<u>முதல் விசாரணை:</u>

நான் தற்போது நல்லம்பள்ளியில் குடியிருந்து, முன்னால் ஊராட்சிமன்ற தலைவராக இருந்து, தற்போது சேவை செய்து வருகிறேன். கடந்த 17.01.2021 அன்று பொங்கல் கரிநாள் தினத்தில், இலளிகத்திலிருந்து நல்லம்பள்ளி செல்லும் சாலையில் உள்ள மணி மளிகை கடை முன்பாக, ஆதிதிராவிடர் குடியிருப்பு பகுதியில் உள்ள மைதானத்தில் பொங்கல் விழா நடைபெற்றுகொண்டிருந்தபோது, எங்கள் ஊரைச்சேர்ந்த, எனக்கு நன்கு தெரிந்த நபரான அ.சா.1ன் அண்ணன் இலளிகத்திலிருந்து நல்லம்பள்ளி நோக்கி சைக்கிளில் வந்தபோது, கூட்டமாக இருந்ததால், சற்றே விலகி, சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது, அவருக்கு பின்னால் வந்த தடம் எண் 1A அரசு பேருந்தின் ஓட்டுநர் ஓட்டி வந்த அரசு பேருந்து மோதி, மாலை சுமார் 04.30 மணிக்கு விபத்து ஏற்பட்டது. விபத்தை பார்த்த நான், கூட்டம் கூடிவிட்டதால், விபத்தில் காயம்பட்டவரின் தம்பி அ.சா.1 விட்டோபதாசுக்கு நேரில் சென்று தகவல் சொன்னேன். விபத்து ஏற்பட்ட நபர் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். விபத்து நடந்த உடன் இறந்தவரின் குடும்பத்திற்கு தகவல் சொல்ல சம்பவ இடத்திலிருந்து உடனே நான் சென்றுவிட்டதால், விபத்தை ஏற்படுத்திய பேருந்தின் ஓட்டுநரை நான் அப்போது பார்க்கவில்லை. அதன்பிறகு காவல் நிலையத்தில் விபத்து நடந்த அதே நாள் ஓட்டுநரை நான் பார்த்தேன். அவரை என்னால் அடையாளம் காட்ட இயலும். ஆஜர் எதிரிதான் அந்த ஓட்டுநர் ஆவார். இவ்வழக்கு குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>

நான் விபத்து சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரியல்ல. விபத்து நடந்தபோது மைதானத்திற்கு வெளியே இருந்தேன். விபத்து நடந்த இடத்திற்கும், நான் இருந்த இடத்திற்கும் சுமார் 60 அடி தொலைவு இருக்கும். சம்பவ இடம் சென்று பார்த்தேன் என்றால், விபத்து நடந்தவுடன் அங்கு சென்று பார்த்தேன். சம்பவ

இடத்தில் சுமார் 10 நபர்கள் கூட்டமாக இருந்தார்கள். அ.சா.1 எனக்கு தெரிந்தவர் என்பதால், அவர் புகார் கொடுத்ததற்கு ஆதரவாக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் விபத்து சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல, தவறு. பேருந்தின் ஓட்டுநர் சரியான திசையில்தான் சென்று கொண்டிருந்தார் என்றும், சைக்கிளில் சென்ற நபர்தான் தவறான திசையில் சென்று தனக்குதானே விபத்தை ஏற்படுத்திக் கொண்டார் என்றால் சரியல்ல. நான் பஞ்சாயத்து தலைவராக இருந்த காரணத்தினாலும், அ.சா.1 எனக்கு தெரிந்த நபர் என்பதாலும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்பு சாட்சி கையொப்பம் செய்தார்.**

**தலைமை குற்றவியல் நடுவர் நீதிபதி,**
**சாட்சியின் கையொப்பம்.** **தருமபுரி.**